ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1972/10 - 2016 ජුනි මස 21 වැනි අඟහරුවාදා - 2016.06.21

*1972/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2009*

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 43 (4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2016, யூன் 17.*

விதிகள்

*1*

*1.* இவ்விதிகள் 2016 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மின்சார (பெறுகை) விதிகள் இல. 02 என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் (இதனகத்துப்பின்னர் ''உரிமம்பெறுநர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மின்சார கடத்துகை உரிமம் பெறுநரால் மின்சாரப் பெறுகைக்கு ஏற்புடைமையாதல் வேண்டும்.

*2.* (இதனகத்துப்பின்னர் ''கருத்திட்டம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) புதிய மின்சாரப் பிறப்பாக்க பொறித்தொகுதியினூடாக அல்லது ஏலவேயுள்ள பொறித்தொகுதியின் பிறப்பாக்க தகைமையின் நீடிப்பினால் புதிய மின்சார பிறப்பாக்க தகமையினை பெறுகை செய்கின்ற செயல்முறையானது தொடங்குவதற்கு முன்னர், உரிமம்பெறுநர் சட்டத்தின் 43 (2) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் பின்வருவன உள்ளடங்கலான அனைத்து இயைபான தகவலையும் தருகின்ற முன்மொழிவொன்றினை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆகக்குறைந்த நீண்டகால பிறப்பாக்க நீடிப்பு திட்டச் செலவில் குறித்துரைக்கப்பட்டுள்ளதான எதிர்கால கோரிக்கை எதிர்வுகூறலுக்கான தொடர்புக் குறியானது (இதனகத்துப்பின்னர் "LGEP" எனக் குறிப்பீடு செய்வதான) அதனகத்துள் இயைபான தகவலின் பிரித்தெடுப்புடன் இணைத்துள் ஆக்கப்படுகின்ற முன்மொழிவின் அடிப்படையின் மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும்.

(ii) புதிய பிறப்பாக்க பொறித்தொகுதி ஊடாக புதிய பிறப்பாக்க அளவு பெறுகை செய்யப்படுகின்றதாயினுஞ்சரி அல்லது ஏலவேயுள்ளதான சக்தி பிறப்பாக்க பொறித்தொகுதி மற்றும் அதற்கான காரணங்களின் பிறப்பாக்க அளவினை நீடிக்கின்றதாயினுஞ்சரியான கூற்று ;

(iii) LTGEP இன் இயைபான ஏற்பாடுகள் கிடைக்கத்தக்க புதிய தொழில்நுட்பங்களின் காரணமாக அல்லது அண்மைய எதிர்காலத்தில் கிடைப்பதற்கு நியாயமாக எதிர்பார்க்கக் கூடியவை உள்ளடங்கலாக எவ்வாறாயினும் ஏதேனும் காரணத்திற்காக எவ்வாறாயினும் பழைமையாக அல்லது நாட்பிந்தியதாக வராதமை பற்றிய உறுதிப்படுத்தல் ;

(iv) சம்பவம் பற்றிய உணர்வுபூர்வமான கற்கைகள் ஆராய்வுகள் பற்றிய விபரங்கள் அத்தகையதான தொழில்நுட்பம், ஏதேனும் சாத்திய தன்மை பற்றிய ஆய்வு என்பன புதிய பிறப்பாக்க பெறுகைக்காக தெரிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த செலவு தெரிவுகள் தொடர்பிலான மேலதிக விவரங்களை ஆராய்வு செய்தல் ;

(v) கருத்திட்ட பரப்பெல்லையானது பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது :-

(அ) பெறுகை செய்யப்பட்ட முன்மொழியப்பட்ட மொத்த புதிய பிறப்பாக்க கொள்ளளவு ;

(ஆ) ஒரு பிறப்பாக்க பொறித்தொகுதி அல்லது பல்வேறு பொறித்தொகுதிகளிலிருந்து எப்புதிய பிறப்பாக்கத்தின் முழுக்கொள்ளளவின் பெறுகை செய்யப்பட வேண்டியதாயினுஞ் சரியான விவரங்கள் ;

(இ) பிறப்பாக்க வகை, அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பம், சக்திவளம் அல்லது எரிபொருள் வகைகள் ;

(ஈ) அதன் ஆயுட்காலத்தினூடாக பொறித்தொகுதியின் எதிர்பார்க்கப்பட்ட தொழிற்பாட்டு நடப்பு முறை ;

(உ) எந்த புதிய பிறப்பாக்க அளவு ஏற்புடைமையாக்கப்பட வேண்டுமோ அந்த புதிய பிறப்பாக்க அளவுக்கான மின்தொகுப்பு நிலையம் ; அத்துடன்

(ஊ) சக்தி கொள்வனவு உடன்படிக்கையின் காலம் ;

(vi) கருத்திட்டத்தின் வர்த்தக தொழிற்பாடு வரை இதன் கீழ் ஆணைக்குழுவிற்கு முன்மொழிவொன்றின் சமர்ப்பண திகதியிலிருந்து கருத்திட்ட கால எல்லை ;

(vii) தொழில்நுட்ப குறித்துரைப்புகள் மற்றும் முன்மொழிவு செய்யப்பட்ட கருத்திட்டத்தின் விவரங்கள் ;

(viii) உத்தேசிக்கப்பட்ட இறுப்பனவு கட்டமைவு ;

(ix) பிறப்பாக்க உரிமம் வைத்திருப்பவர் அல்லது நம்பிக்கையாக வைத்திருப்பவர் எனும் தகமையில் ஏலங்கோரல் செயல்முறையில் பங்கெடுப்பதற்கு உரிமம் பெறுநர் உத்தேசிக்கின்றவராயினுஞ் சரியான கூற்று ;

(x) புதிய பிறப்பாக்க அளவின் சுமையிடுகை (புதிய பிறப்பாக்கம் அடிப்படைச் சுமையாக அல்லது வேறுவகையில் பயன்படுத்தப்படுவதாயினுஞ்சரி);

(xi) ஆவண முன்மொழிவுகளுக்கான வரைபு வேண்டுகோள்.

3. பெறுகைக்கான முன்மொழிவு ஆணைக்குழுவிற்கு உரிமம்பெறுநரினால் ஒரு தடவை சமர்ப்பிக்கப்படும்போது, ஆணைக்குழு முன்மொழிவினை கவனத்தில் கொள்ளும் என்பதுடன் அவசியமேற்படின் ஏனைய கிடைக்கத்தக்க பொறித்தொகுதி தெரிவுகளுக்கெதிராக தெரிவு செய்யப்பட்ட பொறித்தொகுதி தெரிவின் உறுதித்தன்மையினை சோதிப்பதற்கு நியாயமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உரிமம் பெறுநரை ஏதேனும் மேலதிக உணர்வுபூர்வமான அறிக்கைகளை மற்றும் சம்பவ ஆராய்வுகளை பொறுப்பு முயற்சியெடுப்பதற்கு வேண்டுதல் செய்தல் வேண்டும் என்பதுடன், அதன் முடிவுகளானவை ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.

4. திருப்தியேற்படின் ஆணைக்குழுவானது புதிய பிறப்பாக்கக் கொள்ளளவை பெறுகை செய்வதற்கான கேள்விக் கோரிக்கைகளுக்காக அழைப்புவிடுகின்ற உரிமம் பெறுநரினால் வெளியிடப்படும் அறிவித்தலின் பாகமாக உருகின்றதான முன்மொழிவுக்கான வரைவு வேண்டுகோளுடன் ஒன்று சேர்த்து முன்மொழிவினை அங்கீகரித்தல் வேண்டும்.

5. ஆணைக்குழுவானது முன்மொழிவினை அங்கீகரித்த பின்னர், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில தினசரி புதினத்தாள்களில் ஒன்றில் முன்மொழிவு ஆவணத்திற்கான கோரிக்கை தொடர்பிலான அறிவித்தலை வெளியிடுவதற்கு உரிமம் பெறுநருக்கு அறிவித்தல் வேண்டும்.

6. உரிமம் பெறுநர் வர்த்தமானியில் முன்மொழிவு ஆவணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கை பற்றிய அறிவித்தலை வெளியிடுதல் வேண்டும்.

7. முன்மொழிவு ஆவணத்திற்கான கோரிக்கையானது கருத்திட்டத்திற்கான குறித்துரைப்புகளை கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கருத்திட்டத்திற்கான குறித்துரைப்புகளை தயாரிக்கும் போது, உரிமங்களானவை நியாயமானளவு நடைமுறைச்சாத்தியமான விதத்தில் பின்வரும் தகவலை உள்ளடக்கிய குறித்துரைப்புகளை உறுதிப்படுத்தல் வேண்டும் :-

(1) முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தின் விபரிக்கப்பட்ட விபரணமொன்று பின்வருவனவற்றினை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) உரிமம் பெறுநரின் மின்தொகுப்பு விதிமுறைமை பற்றிய விபரணமொன்று;

(ஆ) கருத்திட்டத்தின் பரப்பெல்லையினது பின்வருவனவற்றினை உள்ளடக்குதல் வேண்டும் :-

(i) பெறுகை செய்யப்படவேண்டிய முன்மொழியப்பட்ட மொத்த புதிய பிறப்பாக்க அளவு ;

(ii) எந்தப் புதிய பிறப்பாக்க அளவு ஏற்புடையதாக்கப்படவேண்டுமோ அந்த புதிய பிறப்பாக்க அளவுக்கான மின்தொகுப்புவிதி உப நிலையம் ;

(iii) பிறப்பிக்க வகை, அடையாளங்காணப்பட்ட தொழில்நுட்பங்கள், சக்திவளம் அல்லது எரிபொருள் வகைகள் ;

(iv) பொறித்தொகுதியுடன் தொடர்புடைய ஏனைய தேவைப்பாடுகள் ;

(v) சக்தி கொள்வனவு உடன்படிக்கைக் காலம் ; அத்துடன்

(vi) அதன் ஆயுட்காலத்தினூடாக பொறித்தொகுதியின் எதிர்பார்க்கப்பட்ட தொழிற்பாட்டு நடப்பு விதிமுறை.

(இ) இட அமைவிடங்கள் மற்றும் பயன்பாடுகள் பற்றிய விபரணம் பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது:-

(i) அடையாளங்காணப்பட்ட உள் இணைப்பு புள்ளிகள் அல்லது பொதுப்புவியல் இடப்பிரதேசம்.

(ii) ஒவ்வொரு அமைவிடங்களுக்கான அளவுகளின் மட்டுப்பாடுகள் மற்றும் இணைப்பு வோல்ற் அளவு மட்டங்கள்; அத்துடன்

(iii) அதே முறையில் பயன்படுத்தப்படும் மற்றும் அதற்கான இயைபான வேறு விபரங்கள் கருத்திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் உத்தேசிக்கப்பட்ட சக்தி வளத்தின் விபரணம்.

(ஈ) கருத்திட்டத்திற்கான மற்றும் அடையாளம் காணப்பட்ட மைற்கற்களுக்கான உத்தேசிக்கப்பட்ட வரைபு ;

(உ) பின்வருவன தொழில்நுட்ப மற்றும் வர்த்தக தரவு பற்றியதாகும் ;-

(i) மின்சார கொள்வனவிற்கான இறுப்பனவு கட்டமைப்பு ;

(ii) இறுப்பனவு, கொடுப்பனவு கட்டமைப்பு மற்றும் நாணயம் ; அத்துடன்

(iii) சக்தி கொள்வனவு உடன்படிக்கை பற்றிய காலம்.

(ஊ) எவையேனும் விலக்களிப்புக்கள் மட்டுப்பாடுகள் மற்றும் உரிமை கைதுறப்பவர்களுக்கு ஏற்புடையவையாகும்.

(2) கருத்திட்ட முன்மொழிவாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்கியது :-

(அ) கருத்திட்டத்தினை கொண்டு செல்வதற்கு முன்மொழிவொன்றாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவம் (கருத்திட்ட முன்மொழிவுகள்) ;

(ஆ) கருத்திட்ட முன்மொழிவாளரினால் ஏற்பாடு செய்யப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சி ;

(இ) மின்தொகுப்பு விதி உப நிலையங்களுக்கான வருகைகள் பற்றிய விபரணங்கள் ;

(ஈ) ஆணைக்குழுவின் ஒருமைப்பாடு மற்றும் திருத்தங்கள் பற்றிய தகவலுடன் முன்மொழிவு ஆவணத்திற்கான கோரிக்கையை திருத்துவதற்கான கோரிக்கையை, உரிமையை உரிமம் பெறுநர் ஒதுக்குதல் பற்றிய கூற்றொன்று ;

(உ) முன்மொழிவு ஆவணத்திற்கான மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கை முறைக்கான கோரிக்கையுடன் தொடர்புடைய தெளிவினை பெற்றுக் கொள்ளுதல் ;

(ஊ) எவையேனும் உத்தேசிக்கப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பற்றிய விபரங்கள் ;

(எ) சாத்தியத்தன்மை வாய்ந்த ஆய்வானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதாயினுஞ்சரியான அல்லது கருத்திட்ட முன்மொழிவாளரால் அதனை கட்டாயமாக ஏற்பாடு செய்வதாயினுஞ் சரியானதான தகவல் ;

(ஏ) ஒப்புரவு மற்றும் தனிசுக்கிடையிலான ஆகக்குறைந்த விகிதம் மற்றும் நிதியளிப்பின் மீதான வேறு எவையேனும் நிபந்தனைகள் ;

(ஐ) கருத்திட்டத்தினை புரிவதற்கான ஆரம்ப கருத்திட்ட முன்மொழிவினை சமர்ப்பித்த வேளையிலிருந்து பெறுகை செய்யப்பட்ட செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் கருத்திட்ட முன்மொழிவாளரினால் வழங்கப்படும் பாதுகாப்பு பற்றிய விபரங்கள் மற்றும் கருத்திட்டத்தின் வர்த்தக ரீதியான தொழிற்பாடு ஏதேனுமிருப்பின் ;

(ஒ) கருத்திட்ட முன்மொழிவாளருக்கு ஏற்புடமைகின்ற வேறு ஏதேனும் நிபந்தனை ;

(ஓ) கருத்திட்ட முன்மொழிவினை வகுத்தமைக்கும் வழமையானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது :-

(i) விண்ணப்பப்படிவத்துடன் உள்ளடக்கப்பட வேண்டியதான தகவல் மற்றும் விபரங்கள் ;

(ii) கருத்திட்ட முன்மொழிவின் படிவம், இலச்சினையிடுதல், அடையாளப்படுத்தல், சமர்ப்பித்தல் ;

(ஔ) உரிமம் பெறுநருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய கருத்திட்ட முன்மொழிவானது கருத்திட்ட முன்மொழிவாளரினால் ஆக்கப்படும் பிணிக்கப்படும் கொடைமுனைவாக கருதப்படுதல் வேண்டுமென்ற கூற்றொன்று ;

(க) எக்கருத்திட்ட முன்மொழிவாளரினால் கருத்திட்ட முன்மொழிவு ஆக்கப்படுகின்றதோ அக்கருத்திட்ட முன்மொழிவுக்கான காலப்பகுதியினைக் குறித்துரைக்கப்படுகின்ற கூற்றொன்று வலிதாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏனைய இயைபான விபரங்கள் ;

(ங) கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி ;

(ச) விபரமான கருத்திட்ட முன்மொழிவினைத் தயாரிப்பதற்கான செலவு பற்றிய கூற்றொன்று கருத்திட்டமானது அத்தகைய கருத்திட்ட முன்மொழிவாளருக்கு அல்லது வேறு வகையில் அளிக்கப்பட்டதாயினுஞ் சரியான கருத்திட்ட முன்மொழிவினால் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஞ) கருத்திட்ட முன் மொழிவாளரின் வேறு ஏதேனும் பொறுப்புடைமைகள் ;

(3) கிடைக்கத்தக்க எவையேனும் ஊக்குவிப்புகள் அல்லது வரிச் சலுகைகள் என்பவற்றின் மீதான தகவலானது கருத்திட்டத்திற்கு கிடைக்கப்பெறுகின்றது.

(4) தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக கருத்திட்டம் மற்றும் செயல்நிறைவேற்ற குறித்துரைப்புகளின் விபரணங்கள் பின்வருவனவற்றுடன் தொடர்பானவை :-

(அ) கருத்திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் ;

(ஆ) தொழில்நுட்ப தகவல் ;

(இ) மின்சக்தி கடத்துகை ; அத்துடன்

(ஈ) ஏற்புடையதாகவிருப்பின் ஏதேனும் சக்தி மூலவளத்தினைப் பயன்படுத்தல், சேகரித்தல், இடம்பெயர்த்தல் அல்லது வேறு பரிகரிப்பு ;

(5) பின்வருவன உள்ளடங்கலான சுற்றிடல் மற்றும் வேறு பிரதிபலன்கள் :-

(அ) பொது சுற்றாடல் தேவைப்பாடுகள் ;

(ஆ) ஏதேனும் திண்ம அல்லது திரவ கழிவுகளை அகற்றுதல் தொடர்பிலான தேவைப்பாடுகள் ;

(இ) வெளியேற்றுகைகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலான தேவைப்பாடுகள் ; அத்துடன்

(ஈ) தொல்பொருளியல், சமூகவியல் தாக்க தேவைப்பாடுகள்.

(6) கருத்திட்ட முன்மொழிவாளர் பற்றிய அனுபவம் தொடர்பிலான தேவைப்பாடுகள்.

(7) சக்தி கொள்வனவு உடன்படிக்கை, சக்தி வழங்கல் உடன்படிக்கையின் மூலம் உள்ளடங்கலாக எந்த உரிமம் பெறுநரினால் அல்லது எவரேனும் அடையாளம் காணப்பட்ட மூன்றாம் திறத்தவர்களினால் கருத்திட்டம் அளிக்கப்பட்டுள்ளதோ அந்த உரிமம் பெறுநர்களுக்கு அல்லது எவரேனும் மூன்றாம் திறத்தவர்களுக்கு கருத்திட்ட முன்மொழிவாளரினால் செய்து கொள்ளப்படும் கருத்திட்ட உடன்படிக்கைகளின் விபரணம் (ஏற்புடைத்தாயின்).

(8) சாதாரணமான வோல்ற் அளவு மற்றும் அடிக்கடியான தொழிற்படும் பின்வரும் மின்பிறப்பாக்க பொறித்தொகுதிக்கான முறைமையின் சிறப்பியல்புகள் மற்றும் கிடைக்கத்தக்க மின்சார கடத்துகை என்பவற்றின் நியதிகளின் பிரகாரம் பின்வருமாறு இணைக்கப்படும் :-

(அ) முறைமை இணைப்பு மற்றும் முறைமையை பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் என்பவற்றினை தாபிப்பதற்கு ஏற்பாடுகள் மற்றும் இணைந்த செலவுகள் ;

(ஆ) பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் எதிர்பார்க்கப்பட்ட தரம் ;

(இ) ஒவ்வொரு மின்தொகுப்பு உப நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆகக்கூடியதான தகைமை ; மற்றும்

(ஈ) ஒவ்வொரு மின்தொகுப்பு உப நிலையத்தில் வோல்ற் இணைப்பு.

(9) புதிய பிறப்பாக்க அளவுக்கான தேவைப்பாடுகளின் விபரங்கள்.

8. முன்மொழிவு ஆவணத்திற்கான வேண்டுகோளானது பின்வரும் தகவலை வழங்வதற்கான கருத்திட்ட முன்மொழிவாளரை தேவைப்படுத்துதல் வேண்டும் ;-

(i) கருத்திட்ட முன்மொழிவாளரை உள்ளடக்கிய அனைத்து தனிப்பட்ட சட்ட உருவகங்களின் பெயர்கள் மற்றும் அனுபவம்;

(ii) கருத்திட்ட முன்மொழிவாளர் மற்றும் இயைபான உற்பத்தி அல்லது பணிப்பாளர் சபையின் இணைந்த கம்பனியின் ஒவ்வொரு உறுப்பினரும் ;

(iii) கருத்திட்ட முன்மொழிவாளரின் ஒவ்வொரு உறுப்பினரால் பூரணப்படுத்தப்படும் இயைபான கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக அல்லது அதன் இயைபான உற்பத்தி இடம் அல்லது இணைந்த கம்பனியின் கருத்திட்ட முன்மொழிவாளரின் ஒவ்வொரு உறுப்பினரின் அனுபவக் காலப்பகுதி (கடந்த பத்து ஆண்டுகள்) மற்றும் செயற்பாட்டிலிருக்கும் இயைபான அனைத்து கருத்திட்டங்களின் பட்டியலிருந்து அல்லது அதன் இயைபான உற்பத்தி இடம் அல்லது இணைந்த கம்பனியானது ஈடுபட்டுள்ளது ;

(iv) சாதனத்தினை வழங்குபவர்கள் அல்லது கருத்திட்ட கருத்திட்டத்தில் முன்மொழிவாளரினால் பயன்படுத்தப்படக்கூடிய உபகரணம் என்பவற்றின் விபரிக்கப்பட்ட விபரணம் ;

(v) கடன் ஒப்புரவு, விகிதங்கள் மற்றும் கருத்திட்டத்தின் காலப்பகுதிக்கான ஏனைய விபரங்கள் உள்ளடங்கலான கருத்திட்ட பிரேரிப்பின் நிதியளிப்பு பற்றிய விபரங்கள் ;

(vi) கருத்திட்ட நிருமாணம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான செலவு எதிர்வுகூறப்பட்ட பற்றிய விபரங்கள் ;

(vii) கருத்திட்டத்துக்கான கருத்திட்ட முன்மொழிவாளரினால் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தின் மீதான தொழில்நுட்ப தகவலானது பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது :-

(அ) பயன்படுத்தவேண்டிய தொழில்நுட்பம் பற்றிய விபரங்கள் ;
(ஆ) சக்தி கடத்துகை பற்றிய விபரங்கள் ; அத்துடன்

(இ) ஏனைய வேறு இயைபான தொழில்நுட்ப விபரங்கள்.

(viii) பொறித்தொகுதிக்காக அடையாளங்காணப்பட்ட இடம் மற்றும் முதனினை சுற்றாடல், தொல்பொருளியல், சமூகவியல் தாக்கம் பற்றிய மதிப்பீடு ;

(ix) ஏதேனும் தகவலை வழங்குவதில் செய்யப்படும் ஏதேனும் ஊகம் ;

9. முன்மொழிவு ஆவணத்திற்கான வேண்டுகோளானது கருத்திட்ட முன்மொழிவாளர்கள் பின்வருவன உள்ளடக்கியதான சமர்ப்பணங்களை ஒப்பீடு செய்வதில் உதவியளிக்கின்ற நம்பிக்கையான வழங்குநர்களால் பூரணப்படுத்துவதற்கு தேவைப்படுத்துகின்றதான அட்டவணைகளுடன் கட்டமைக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளை தேவைப்படுத்துதல் வேண்டும் :-

(i) அத்தகையதான அடிப்படை மற்றும் உச்ச அளவு என்பவற்றின் சக்திவலுவின் வேறுபட்ட கிளைகளுக்கான விலைகள்;

(ii) வழமையான ஆரம்பம் மற்றும் மூடு விலைகள் ;

(iii) தகைமை பற்றிய ஏற்பாட்டிற்கான உரிமம் பெறுநரினால் செலுத்தப்படும் எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவுகள் ;

(iv) மின்தொகுப்பு விதிக்கோவையில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுகின்ற சான்றுக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப பொறித்தொகுதித் தரவு ;

(v) பொறித்தொகுதி பற்றிய தகைமைவியல்வு ;

(vi) துணைச்சேவைகள் மற்றும் அதற்கான இணைந்த விலைகளை வழங்குவதற்கான இயலுமையை சுட்டிக்காட்டுகின்ற தொழில்நுட்பத்தரவு ; அத்துடன்

(vii) காலத்துக்குக் காலம் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

10. முன்மொழிவு ஆவணத்திற்கான கோரிக்கையானது செயற்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் அளிப்பதன் தொடர்பில் பின்வருவன உள்ளடங்கிய தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(1) மதிப்பீட்டு நடவடிக்கை முறை பற்றிய உருவரைபு ;

(2) கருத்திட்ட முன்மொழிவினை திறத்தல் பற்றிய தகவல் மற்றும் ஒவ்வொரு பிரதிபயன் பற்றிய முக்கியத்துவம் மற்றும் எந்தக் கருத்திட்ட முன்மொழிவின் ஒவ்வொரு விடயத்தினால் சொல்முறைப்படுத்தப்படுகிறதோ அந்த கருத்திட்ட முன்மொழிவின் செயல்முறை என்பன உரிமம் பெறுநரினால் பொறுப்பு முயற்சியெடுக்கப்படும் இரகசியத்தன்மை வாய்ந்த கடப்பாடுகள் உள்ளடங்கலாக ;

(3) (அ) ஏதேனும் கருத்திட்ட முன்மொழிவினை நிராகரிப்பதற்கான உரிமம் பெறுநருடைய உரிமையினை ஒதுக்குகின்ற கூற்றொன்று ;

(4) பின்வருவனவற்றினை உள்ளடக்கியதான மதிப்பீட்டு பிரதிபயன்கள் பின்வருமாறு :-

(அ) பூரணப்படுத்தியதானுஞ் சரியானதன் மீதான கருத்திட்ட முன்மொழிவு பற்றிய பதிலளிக்கும் தன்மை மற்றும் முன்மொழிவு ஆவணத்திற்கான வேண்டுகோளினால் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தியதுடன்;

(ஆ) ஒப்புரவு பங்குபற்றுகை, அபிவிருத்தி அனுபவம், இறுப்பனவு முன்மொழிவுகள், பணியாட்தொகுதியாளரின் அனுபவம், சாதனதரம், சாதானதின் நம்பகத்தன்மை மற்றும் நேரடிமுடிவு, உரிமத்தின் மின்தொகுப்பு கோவை பற்றிய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல், இயல்தகமையுடைய பின்பற்றுகின்ற பாரத்தினை வழங்குவதற்கான நெகிழ்வுதன்மை, பொறித்தொகுதியின் எதிர்பார்க்கப்பட்ட தரகுபடுத்துதல், சுற்றாடல் பிரதிபயன்கள், தொழிற்பாட்டு ஏற்பாடுகள் என்பன உள்ளடங்கலான தொழில்நுட்ப மற்றும் வர்த்தகரீதியான தொழிற்பாடுகள்;

(இ) கருத்திட்டத்திற்கான நிதித்திட்டம் பற்றிய வலிமை மற்றும் வழங்கப்பட்ட பாதுகாப்பு உள்ளடங்கலாக அதன் தேவைப்பாடுகள்;

(ஈ) உரிமம் பெறுநரினால் உரிமத்தின் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுதல்;

(உ) ஏலவேயுள்ள பொறித்தொகுதி பயன்பாடு மற்றும் ஒப்பந்த நிலைமைகள் பற்றிய உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி பற்றிய தாக்கம் ;

(ஊ) இணைப்புச் செலவுகள் மற்றும் முறைமை இழப்புகள் பற்றிய தாக்கம் உள்ளடங்கலான தேவைப்படுத்தப்படும் மின்சாரக் கடத்துகை முதலீடு ;

(எ) கோரிக்கை தேடல் மற்றும் துணைச்சேவைகள் வழங்குதல் என்பவற்றுக்கான பொறித்தொகுதியிலான அபிவிருத்தி வெப்பத்தின் நெகிழ்ச்சித் தன்மை ;

(ஏ) உத்தேசிக்கப்பட்ட இடங்களில் சக்திவலுவின் உத்தேசிக்கப்பட்ட மூலவளத்திற்கும் மற்றும் அவசியமான உட்கட்டமைப்பு ஏனைய உள்ளிடும் மூலப்பொருட்களுக்கான கிடைக்கத்தக்க தன்மை அல்லது அணுக்கத்தன்மை;

(ஐ) சக்தி வலுவின் உத்தேசிக்கப்பட்ட மூலவளத்தின் பெறுகைக்கான உத்தேசிக்கப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் ஒப்பந்த ரீதியிலான ஏற்பாடுகள் ;

(ஒ) நிருமாண காலப்பகுதி மற்றும் இணைந்த செலவு மற்றும் பாதுகாப்பு தாக்கங்கள் ; அத்துடன்

(ஓ) இடத்தின் குறித்துரைத்த சுற்றாடல் பிரதிபயன்கள்.

11. உரிமம் பெறுநர் செயற்றிட்ட முன்மொழிவினை மதிப்பீடு செய்ததன் பின்னர், அத்தகைய உரிமம் பெறுநர், சட்டத்தின் 43(5) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் அதன் அங்கீகரிப்புக்காக ஆணைக்குழுவுக்கு மிகப்பொருத்தமான கருத்திட்ட முன்மொழிவாளரை பரிந்துரை செய்தல் வேண்டும்.

12. உரிமம் பெறுநர் குறித்துரைப்புகளுக்கும் மற்றும் புதிய மின்பிறப்பாக்க அளவின் நம்பிக்கையான வழங்குநர்களுடனான அதன் இணக்கப்பாடுகளைத் தொடர்ந்தான எவையேனும் திருத்தங்களுக்கும் இணைக்கப்படக்கூடியவாறான வரைவு சக்திவலுக் கொள்வனவு உடன்படிக்கையின் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

13. இவ்விதிகள் சொல்லபமைப்பு வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி :-

"சட்டம்" என்பது, 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கை மின்சார சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச், சட்டம் என்று பொருளாகும்.

"ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு என்று பொருளாகும்;

"மின்தொகுப்பு கோவை" என்பது, சட்டத்திற்கிணங்க வடிவமைக்கப்பட்ட இலங்கை மின்தொகுப்பு விதிக்கோவை என்று பொருளாகும் ;

"மின்தொகுப்பு நிலையம்" என்பது, உள்வரும் வழங்கலான உயர் வோல்ற் அளவில் உள்ளவிடத்து மாற்றத்திற்கு, மாற்றுவதற்கு, மின்சார சக்தியினை ஆளியாக்குவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்காக ஏதேனும் அவசியமான முடியமைத்தலில் தொடர்புபட்டுள்ள உபகரணங்களை ஒன்றாக்குதல் என்று பொருளாகும் ;

"புதிய பிறப்பாக்க அளவு" என்பது, மின்சார கடத்துகை முறைமைக்கு நேரடியாக இணைக்கப்பட வேண்டிய அல்லது இணைக்கப்பட்ட புதிய மின்பிறப்பாக்க பொறித்தொகுப்பு அல்லது ஏலவேயுள்ள மின்பிறப்பாக்க பொறித்தொகுதியின் நீடிப்பு என்று பொருளாகும் ;

"கருத்திட்ட முன்மொழிவாளர்" என்பது, தேவைப்படும் மின்பிறப்பாக்க அளவை வழங்குவதில் அக்கறையுள்ள எவரேனும் ஆள் என்று பொருளாகும்.

7-340

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.